## ஆம்பூர் நகரம்

**அமைப்பாளர் :** மு.சரண்ராஜ், 32/18–ஏ, வளையல்க்காரர் தெரு, ஆம்பூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) க.சத்யராஜ், 12, இந்திரா நகர், 3–வது தெரு, எஸ்.கே.ரோடு, ஆம்பூர். (2) அ.கோபி, 30, ஏரிக்கரை தெரு, கெங்காபுரம், ஆம்பூர். (3) ர.அரவிந்தன், 6, 2–வது தெரு, 3–வது தார்வழி, ஆம்பூர். (4) யூ.முபாரக் பாஷா, 35/19, 4–வது தெரு, கே.எம். நகர், புதுமனை, ஆம்பூர். (5) ச.கௌதம், 20/2, புதுத் தெரு, சான்றோர்குப்பம், ஆம்பூர். (6) செ.வெங்கடேசன், 7/4, குமரேசன் தெரு, கஸ்பா–பி, ஆம்பூர். (7) சி.நபீஸ் அஹமத், 6, சுண்ணாம்புக்காரர் தெரு, 4–வது சந்து, ஆம்பூர்.

## ஆலங்காயம் பேரூர்

**அமைப்பாளர் :** த.சீனிவாசன், 32, பாமாண்டி சின்னபையன் தெரு, ஆலங்காயம், திருப்பத்தூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ரா.கணேஷ், 18, ராஜாபாளையம், ஆலங்காயம், திருப்பத்தூர். (2) சீ.தண்டபாணி, 18, மதனப்பள்ளியான் தெரு, படக்குப்பம், ஆலங்காயம் (அ), திருப்பத்தூர். (3) சே.சாந்தகுமார், 14, காமராஜர் தெரு, ஆலங்காயம், பெத்தூர், திருப்பத்தூர். (4) த.சந்துரு, 25, ரெட்டியார் தெரு, பெத்தூர், ஆலங்காயம்.

## உதயேந்திரம் பேரூர்

**அமைப்பாளர் :** கே.சத்தியமூர்த்தி, 17/31, காந்தி ரோடு, உதயேந்திரம், வாணியம்பாடி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ப.சிலம்பரசன், 17, புதுத் தெரு காலனி, ஜாப்ராபாத் (அ), மேட்டுப்பாளையம், வாணியம்பாடி. (2) ர.மதன்குமார், 9, பாரதிதாசன் தெரு, உதயேந்திரம், வாணியம்பாடி. (3) ரா.அருண், 5, சுப்புராயன் கோயில் தெரு, உதயேந்திரம், வாணியம்பாடி. (4) சா.வினோத்குமார், 11/10, தொப்பசாமி தெரு, சி.வி.பட்டறை, உதயேந்திரம், வாணியம்பாடி, திருப்பத்தூர்.

## நாட்றம்பள்ளி பேரூர்

**அமைப்பாளர் :** (1) சூ.ஸ்ரீகீர்த்திராஜன், 5, ரங்கசாமி தெரு, நாட்றம்பள்ளி (அ), திருப்பத்தூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) சி.அகிலன், 155/2 ஆர்.சி.எஸ். பிரதான சாலை, நாட்றம்பள்ளி, திருப்பத்தூர். (2) ஜெ.வெங்கடேசன், 58, தாயப்பர் தெரு, நாட்றம்பள்ளி, திருப்பத்தூர். (3) மு.ஆனந்தன், தாயப்பர் தெரு, நாட்றம்பள்ளி.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 30–01–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மெட்ராஸ் ENT ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் மருத்துவர் மோகன் காமேஸ்வரன் அவர்களின் 70 – வது பிறந்தநாளையொட்டி நேற்று (30.1.2025) சென்னை, அடையாறில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார்.

### நீலகிரி மாவட்ட ஜென்மம் எஸ்டேட் சட்டப்பிரிவு 17 நிலங்கள் தொடர்பான

# நீதிமன்ற வழக்குகள் - நிலவரி திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை!

சென்னை, ஜன.31-

நீலகிரி மாவட்டத்தில், கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்களில் ஜென்மம் நிலஉடைமை முறை குறித்து வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசு 1969 ஆம் ஆண்டு ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரி மாற்றம்) சட்டத்தில் பிரிவு 17 நிலங்களில் வசிக்கும் மக்களின் அடிப்படை வசதிகள், நீதிமன்ற வழக்குகள் மற்றும் நிலவரித் திட்ட பணிகள் குறித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை நடத்தினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (30.01.2025) நீலகிரி மாவட்டத்தில், கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்களில் ஜென்மம் நிலஉடைமை முறை குறித்து வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசு 1969-ஆம் ஆண்டு ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரி மாற்றம்) சட்டத்தில் பிரிவு 17 நிலங்கள் தொடர்பான நீதிமன்ற வழக்குகள் மற்றும் நிலவரித் திட்ட பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், நீலகிரி மாவட்டத்தில், தமிழ்நாடு அரசு 1969 ஆம் ஆண்டு ஜென்மம் எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் இரயத்துவாரி மாற்றம்) சட்டத்தின் அடிப்படையில் குத்தகை காலம் முடிந்த 34,986.28 ஏக்கர் நிலங்களை மீட்கும் நடவடிக்கையை தொடரவும், மேற்கண்ட சட்டப்பிரிவு 17 நிலங்களில் நீண்ட காலமாக வசித்து வரும் மக்களுக்கு அடிப்படை தேவைகள் மற்றும் வசதிகளை நிறைவேற்றும் பொருட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், கூடலூர் ஜென்மம் நிலங்களில் தகுதியான குடியிருப்பு பகுதிகளுக்கு அடிப்படை தேவைகளை நிறைவேற்றிட உள்ள தடையாணையை நீக்கும் பொருட்டு உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு தாக்கல் செய்யவும், நீதிப் பேராணை மனு எண். 202/1995இல் விவாதிக்கப்படும் வனப்பிரச்சனைகளிலிருந்து தமிழ்நாடு கூடலூர் ஜென்மம் நிலங்கள் சட்டம் 1969இன் கீழ் வரும் வழக்குகளை பிரித்து தனியாக விசாரணை செய்ய உச்சநீதி மன்றத்தில் உரிய அனுமதி பெறுவது குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், வனத்துறை அமைச்சர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.பெ.அமுதா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், சுற்றுசூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், சட்டத்துறை செயலாளர் சி. ஜார்ஜ் அலெக்சாண்டர், நில நிருவாக ஆணையர் மருத்துவர் கே.சு.பழனிச்சாமி, நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் ப.மதுசூதன்ரெட்டி மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் காட்பாடி ஊராட்சி ஒன்றியம் ஆரிமுத்து மோட்டூர் ஊராட்சி திருப்பாக்குட்டையில் பகுதிநேர நியாய விலைக் கடையை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, ஒன்றியக் குழு தலைவர் வேல்முருகன் மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில் குமார் , மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, காட்பாடி ஒன்றிய குழு துணை தலைவர் சரவணன், ஒன்றிய கழக செயலாளர் தணிகாசலம், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கிருபாகரன் , ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் எஸ் .பிரியா சங்கர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தேசிய பாரா தடகள சாம்பியன்ஷிப் –

# ஆசிய ட்ரையத்லான் கோப்பை போட்டிகள்!

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் - பிப்ரவரி மாதம் நடத்துகிறது!

சென்னை, ஜன. 31-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுரையின்படியும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் தேசிய பாரா தடகள சாம்பியன்ஷிப் மற்றும் ஆசிய ட்ரையத்லான் கோப்பை போட்டிகள் நடத்தப் படவுள்ளது.

நேரு உள்விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற பத்திரிக்கையாளர் சந்திப்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் கூறியதாவது:

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பிப்ரவரி மாதம் தமிழ்நாடு பாராலிம்பிக் விளையாட்டு சங்கத்துடன் இணைந்து 23வது தேசிய பாரா தடகள சாம்பியன்ஷிப் மற்றும் தமிழ்நாடு ட்ரையத்லான் சங்கத்துடன் இணைந்து SDAT ஆசிய ட்ரையாத்லான் கோப்பை போட்டிகளை நடத்தவுள்ளது.

23வது தேசிய பாரா தடகள சாம்பியன்ஷிப் 2025 போட்டி பிப்ரவரி 17 முதல் 20 வரை சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டரங் கத்தில் இந்தியா முழுவதிலும் இருந்து 1,700க்கும் மேற்பட்ட பாரா தடகள வீரர்-வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர். இந்த சாம்பியன்ஷிப் போட்டி மாற்றுத்திறனாளிகள் தங்கள் அசாதாரண திறன்கள் வெளிப்படுத்தும் ஒரு தளமாக அமையும்.

SDAT ஆசிய ட்ரையாத்லான் (Triathlon) கோப்பை 2025 போட்டி பிப்ரவரி 16-ஆம் தேதி சென்னை INS (இந்திய கடற்படை கப்பல்) அடையாறில் நடைபெறும். சர்வதேச வீரர்கள் பங்குபெறும் இப்போட்டி 750 மீட்டர் நீச்சல், 20 கிலோமீட்டர் சைக்ளிங் மற்றும் 5 கிலோ மீட்டர் ஓட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக நடத்தப்படும்.

இதன் தொடர்ச்சியாக, தேசிய பாரா தடகள சாம்பியன்ஷிப் மற்றும் ஆசிய ட்ரையத்லான் கோப்பை போட்டிகளுக்கான சின்னம் மற்றும் இலச்சினையை வெளியிடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் இந்திய பாராலிம்பிக் குழுவின் பொதுச் செயலாளர் ஜெயவந்த் குண்டு, தமிழ்நாடு பாராலிம்பிக் விளையாட்டு சங்கத்தின் செயலாளர் கிருபாகரராஜா, தமிழ்நாடு ட்ரையாத்லான் சங்கத்தின் தலைவர் ராமசந்திரன், பாரிஸ் பாராலிம்பிக்ஸில் வெள்ளி பதக்கம் வென்ற செல்வி. துளசிமதி முருகேசன், விளையாட்டு சங்க நிர்வாகிகள் மற்றும்அரசுஉயர்அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. வர்த்தக அணி அமைப்பாளர்

# மயிலை ஆர்.பாலு இல்லத் திருமண விழா! துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

## மயிலை த.வேலு தலைமை! அன்பகம் கலை, கவிஞர் காசி முத்து மாணிக்கம் முன்னிலை!

சென்னை ஜன.31-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், திருமதி துர்கா ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துகளுடன் சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு, திருமதி லட்சுமி பாலு ஆகியோரின் இளைய மகள் டாக்டர் பா.ப்ரீத்தாவுக்கும், சென்னை ராஜா அண்ணாமலைபுரம் கே.பிரகாசம், திருமதி தேவி பிரகாசம் ஆகியோரின் இளைய மகன் பி. சிவக்குமாருக்கும் திருமணம் 2.2.2025 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி அளவில் திருமண நிகழ்ச்சியும் அன்று மாலை 6:30 மணிக்கு மேல் மணவிழா



வரவேற்பு நிகழ்ச்சியும் ஏ.வி.எம்.இராஜேஸ்வரி கல்யாண மண்டபம் மயிலாப்பூரில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு நிகழ்ச்சிக்கு சென்னை தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ தலைமை ஏற்கிறார்.

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, மாநில வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மாவட்ட துணைச் செயலாளர் பாலவாக்கம் த. விஸ்வநாதன் எம்.சி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தியாகராயர் நகர் கிழக்கு பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, மயிலை கிழக்கு பகுதிச் செயலாளர் எஸ். முரளி, மயிலை மேற்கு பகுதி கழகச் செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி, தியாகராயர் நகர் மேற்கு பகுதிச் செயலாளர் கே. ஏழுமலை எம்.சி ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இம்மண விழா வரவேற்பில் கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகிறார்.

விழாவில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக மாநில, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாநில, மாவட்ட, பகுதி நிர்வாகிகள், கழக முன்னணியினர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாலவாக்கம் எஸ்.தீபக், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ். சரவணன், வட்டச் செயலாளர் துரை பார்த்திபன், 171வது வட்டம் த.ஜெகதீஷ் ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர்.

### மண்டலம் –5 க்குட்பட்ட துறைமுகம் தொகுதி, வார்டு 55–ல்

# ரூ.36.76 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் உடற்பயிற்சிக் கூடம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன.31-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (30.01.2025) துறைமுகம் தொகுதியில் ரூ.36.76 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் உடற்பயிற்சிக் கூடம் கட்டும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -5 க்குட்பட்ட துறைமுகம் தொகுதி, வார்டு-55 ல் உள்ள சண்முகம் தெருவில் 2024-2025 ஆம் நிதியாண்டிற்கான மாநகராட்சி மூலதன நிதியின் மூலம் ரூ.36.76 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் உடற்பயிற்சிக் கூடம் கட்டப்படவுள்ளது. இதற்கான கட்டுமானப் பணியினை தொடங்கி வைத்திடும் வகையில் நடைபெற்ற அடிக்கல் நாட்டு விழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா ராஜன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, இராயபுரம் மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் தாஹா நவீன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கழுநீர்குளம் ஊராட்சியில் தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைய உள்ள கலைஞர் அவர்களின் அறிவாலய கட்டிடத்திற்கு கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அடிக்கல் நாட்டியும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழா கொடிக்கம்பத்தில் கழக கொடி ஏற்றியும் பணிகளை துவக்கி வைத்தார். உடன் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார், முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா, ஒன்றிய செயலாளர் சிவன்பாண்டியன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று (30.01.2025) சட்டமன்ற பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டியை ஜப்பான் நாட்டின் கனகவா மாகாண பேரவை துணைத் தலைவர் கொண்டோ டைசுகி தலைமையிலான குழுவினர் சந்தித்தனர். இந்நிகழ்வின் போது சட்டமன்ற பேரவை முதன்மைச் செயலாளர் கி.சீனிவாசன் உடனிருந்தார்.